**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**

**முன்னிலை திரு. வ. ராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2022 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31 ஆம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.169/2021**

CNR.No.TNVR13-000621-2021

அ.அழகர் ... வாதி

/வாதி/

செ.அழகு ... பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 26.10.2022 அன்று வந்தபோது வாதிதரப்பில் வழக்கறிஞர் திரு.பி.தேரிராஜன் அவர்கள் ஆஜரான நிலையிலும் பிரதிவாதி வழக்கறிஞர் திரு.பி.சீனிவாசகன் அவர்கள் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தாலும் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக ஆகியுள்ள நிலையிலும் வாதிதரப்பு கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்புரை

1. இந்த வழக்கானது வாதிக்கு பிரதிவாதியை ரூ 5,02,000/−ஐயும் அதில் அசல் தொகை ரூ 2,00,000/−க்கு பிராது தேதிமுதல் தொகை செலுத்தும் நாள்வரை ஆண்டுக்கு 12% வீதம் பின்வட்டியும் செலுத்தும்படி கோரியும் அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் வழக்கு அடமானச் சொத்தை ஏலம்போட்டு ஏலத்தில் வரும் தொகையை டிக்கிரிக்கு வரவு வைக்கத் தோதாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிராதின் சுருக்கம்:−

வழக்கு சொத்து விபரத்தில் கண்ட சொத்தானது 05.12.2011 ம் தேதியிட்ட பதிவு செய்த இனாம் செட்டில்மெண்ட் மூலமாகவும் பாகவிஸ்தி மூலமாகவும் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்டதாகும். வாதியிடம் பிரதிவாதி கடந்த 05.06.2013 ம் தேதி பிரதிவாதியின் குடும்பார்த்த வகைத் தேவைகளுக்காக வேண்டி வாதியிடம் ரொக்கம் கடனாக ரூ

2,00,000/– பெற்றுக் கொண்டும் மேற்படி அடமான வட்டிக் கடனுக்காக அசலுக்கு ரூ 100/–க்கு மாதம் 1க்கு வட்டி ரூ 1.00 வீதம் வட்டி கூட்டி கூடிய வட்டியையும் முதலையும் சேர்த்து ஒரு வருடத்தவணைக்குள் செலுத்திவிடுவதாகவும் ஒருவருடத் தவணைக்குள் செலுத்தத் தவறினால் மேற்படி அடமானத் தொகைக்கு மாதம் 1க்கு ரூ 100/–க்கு வட்டி ரூ 1.50 வீதம் அபராத வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு அதற்கு ஆதரவாக அதேதேதியில் பிரதிவாதிக்குப் பாத்தியமான வழக்குச் சொத்தை ஈடுகாட்டி ஒரு பதிவு செய்த அடமான வட்டிக் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். வாதிக்குத் தர வேண்டிய அடமானக் கடனையும் அதற்கான வட்டியையும் திரும்பத் தருமாறு வாதி பலமுறை பிரதிவாதிக்கு துயர்ந்து கேட்டதில் விரைவில் திரும்பத் தருவதாகக் கூறி உண்டான அசலுக்கோ பின்வட்டிக்கோ நாளது தேதிவரை எந்தவொரு தொகையும் செலுத்தாமல் வீண் சாக்குபோக்குகள் கூறி காலம் கடத்தி வந்துள்ளார். வாதி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 18.9.2021ம் தேதி அறிவிப்பு ஒன்றை அனுப்பி அதனை 21.9.2021ம் தேதி பெற்றுக் கொண்ட பிரதிவாதி எந்தவொரு பதிலும் அனுப்பவில்லை. எந்தவொரு தொகையும் செலுத்தவில்லை. எனவே மேற்படி அடமான வட்டிக் கடன் தொகையை வசூல் செய்யும் பொருட்டு வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

3, பிரதிவாதி வழக்கறிஞர்மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தாலும் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக ஆகியுள்ளார். வாதிதரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பு கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

4. தீர்வு:–

இந்த வழக்கானது வாதிக்கு பிரதிவாதியை ரூ 5,02,000/–ஐயும் அதில் அசல் தொகை ரூ 2,00,000/–க்கு பிராது தேதிமுதல் தொகை செலுத்தும் நாள்வரை ஆண்டுக்கு 12% வீதம் பின்வட்டியும் செலுத்தும்படி கோரியும் அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் வழக்கு அடமானச் சொத்தை ஏலம்போட்டு ஏலத்தில் வரும் தொகையை டிக்கிரிக்கு வரவு வைக்கத் தோதாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. வாதிதரப்பில் வாதியிடம் பிரதிவாதி அவரது குடும்ப செலவிற்காக வேண்டி கடந்த 05.06.2013ம் தேதி ரூ 2,00,000/– கடனாகப் பெற்றுக் கொண்டு மேற்படி கடன்தொகைக்கு மாதம் 1க்கு ரூ 100/–க்கு ரூ 1.00/– வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு மேற்படி தொகைக்கு ஆதரவாக அதே தேதியில் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தை அடமானம் வைத்து ஒரு அடமானப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும் அடமானப்பத்திரத்தில் கண்ட வட்டியையும் அசலையும் பிரதிவாதி செலுத்தவில்லை என்றும் எனவே வாதி பிரதிவாதிகளிடமிருந்து தொகையை வரப்பற்ற இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

6. வாதிதரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வாதிதரப்பு வழக்கு குறித்து சாட்சியமளித்துள்ளார். வாதிதரப்பில், அடமானக் கடன் பத்திரம் வா..சா.ஆ.1 ஆகவும் பிரதிவாதிக்கு அவரது சகோதரர் எழுதிக் கொடுத்துள்ள இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.2 ஆகவும் வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகவும் அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. வாதிதரப்பில் வாதியிடம் பிரதிவாதி அடமானக் கடன் பத்திரத்தின் அடிப்–படையில் கடன் பெற்றது குறித்து வாதிதரப்பில் அதற்குரிய ஆவணங்களைத் தாக்கல் செய்து சாட்சியமும் அளிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் இந்நீதி மன்றத்தில் ஆஜராகியிருந்தாலும் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக ஆகியுள்ளார். எனவே வாதி தனதுதரப்பு வழக்கை வா.சா.1ன் சாட்சியம் மூலமும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையுள்ள சான்றாவணங்கள்மூலமும் நிரூபித்துள்ள நிலையிலும் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தாலும் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக ஆகியுள்ள நிலையிலும் வாதியின் வழக்கு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதியின் பிராது, வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் பிரதிவாதிகளின் வருகையின்மை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்குக் கிடைக்கத்தக்கதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. முடிவாக வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு பிரதிவாதி ரூ 5,02,000/−ஐயும் அதில் அசல் தொகை ரூ 2,00,000/−க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 12% வட்டியும் தீர்ப்பாணை தேதிமுதல் தொகை செலுத்தும் நாள்வரை ஆண்டுக்கு 6% வட்டியும் மூன்று மாத காலத்திற்குள் கொடுக்கவேண்டும் என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்துத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு என்னால் 2022 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31 ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM Date: 2022.10.31 19:18:05 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

வாதிதரப்பு சாட்சிகள் :−

வா.சா.1. திரு. அழகர்

வாதிதரப்பு சான்றாவணங்கள் :−

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 05.06.2013 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த அடமானக் கடன் பத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.2. | 05.12.2011 | பிரதிவாதி பெயரில் உள்ள இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் |
| வா.சா.ஆ.3. | 18.09.2021 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.4. | −−− | அஞ்சலக ஒப்புதல் அட்டை |

பிரதிவாதிதரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : − இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM Date: 2022.10.31 19:18:14 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அ.வ.எண்.169/2021
சீரான/வரைவுத் தீர்ப்புரை
நாள் 31.10.2022